# CEYLINCO LIFE

**Ceylinco Life Insurance Limited**

Ceylinco Life Tower, No. 106, Havelock Road, Colombo 5, Sri Lanka. Co. Reg. No. PB5183
Tel: (+94) 11 2461000, 2461461 Fax: (+94) 11 2555959. Website: www.ceylincolife.com E-mail: service@ceylife.lk


# செலிங்கோ லைஃப் இன்சூரன்ஸ் லிமிட்டட்

# கடன் உடன்படிக்கை

## ஆயுள் காப்புறுதி சம்பந்தமான தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆயுள் காப்புறுதி இல. | | கடன் தொகை | |
| காப்புறுதித் தொகை | | கடன் கொடுப்பனவு திகதி | |
| காப்புறுதி ஆரம்பத் திகதி | | வருடாந்த வட்டி வீதம் % | |

## மீள் செலுத்துதல்

| | | | |
|---|---|---|---|
| மீள் செலுத்துகை காலம் | | மாதாந்த மீள் கொடுப்பனவு | |

........................................................................................................................................................ எனும் விலாசத்தில் வதியும்........................................................ தே.அ.அட்டை இலக்கத்தையுடைய ........................................................ ........................................................................................................................ (முழுப்பெயர்) ஆகிய நான்/நாம் .................................. இலக்க ஆயுள் காப்புறுதியின் காப்புறுதிதாரர் ஆவேன்/ஆவோம். இதன் பின் ........................................................................................................ ஆகிய நான்/நாம் மற்றும் எமது வாரிசுகள், நிறைவேற்றுனர்கள் மற்றும் நிர்வாகிகள் அத்துடன்/அல்லது பயனாளிகள் வேண்டப்படும் இடத்து “கடன் பெறுனர்” என்ற சொற்பதத்தால் அழைக்கப்படுவர்.

இல. 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05 எனும் முகவரியில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கொண்டுள்ள செலிங்கோ லைஃப் இன்சூரன்ஸ் லிமிட்டட் ஆனது (இனிமேல் “கம்பனி” என அழைக்கப்படும்) மேற்குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்திலான மீள் கொடுப்பனவிற்கு அமைவாக எனது/எமது ஆயுள் காப்புறுதி பத்திரத்தின் பிணைப்பொறுப்பின் மேல் ரூபா........................................................ஐ கடனாக வழங்குகின்றது.

நான்/நாம் இத்தால் பின்வருவனவற்றை வெளிப்படுத்தி ஏற்றுக்கொண்டு உடன்பட்டும் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

1. கடன் தொகைக்கான வட்டி செலுத்தப்படாதவிடத்து மேற்குறிப்பிடப்பட்ட கடனுக்கான வட்டியானது அரையாண்டிற்கு ஒரு முறை கணிப்பிடப்பட்டு கடன் தொகையுடன் சேர்க்கப்படும். மேலும் வட்டிவீதமானது சந்தை நிலவரத்திற்கேற்றவாறு கம்பனியால் மாற்றப்படலாம் என நான்/நாம் அறிந்து வைத்துள்ளேன்/வைத்துள்ளோம்.
2. இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக முழுக்கடன் தொகையையும் அதற்குண்டான வட்டியையும் காப்புறுதி முதிர்வு திகதிக்கு முன்னதாக செலுத்தி முடிப்பேன்/செலுத்தி முடிப்போம் என ஏற்றுக்கொள்கின்றேன்/ஏற்றுக்கொள்கின்றோம்.

3. கடன்தொகையும் அதற்குண்டான வட்டியும் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தப்படாத வேளையில் அவற்றின் மொத்த தொகை காப்புறுதியின் ஒப்படைப்பு பெறுமதியை மீறும்போது இக்காப்புறுதி ஒப்பந்தத்தை ஒரு ஒப்படைப்பு செய்யப்பட்ட காப்புறுதியாக கம்பனி கருதும் என்பதை நான்/நாம் ஏற்று அதற்கு சம்மதமும் தெரிவிக்கின்றேன்/தெரிவிக்கின்றோம். அத்துடன் இக் குறிப்பிட்ட காப்புறுதி ஒப்பந்தத்தின் மீதான ஏதேனுமொரு கோரிக்கைக்கு நான்/நாம் வாரிசுகள், நிறைவேற்றுனர்கள் மற்றும் நிர்வாகிகள் உரித்துடையவர்களல்ல.

4. பெறப்பட்ட கடன் சம்பந்தமாக கம்பனியால் எடுக்கப்படும் எந்த தீர்மானமும் இறுதி தீர்மானம் என்பதற்கு எனது / எமது சம்மதத்தை தெரிவிக்கின்றேன் / தெரிவிக்கின்றோம். இது சம்பந்தமாக நான் / நாங்கள் அல்லது எனது/எமது வாரிசுகள் நிறைவேற்றுனர்கள் அல்லது நிர்வாகிகள் எவ்வித கேள்விகளும் எழுப்பவியலாது.

5. கடன் ஒன்று நிலுவையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் ஏதாவது கோரிக்கை ஒன்றிற்கான கொடுப்பனவொன்று செய்யப்பட நேரிடில், நிலுவையாகவுள்ள கடன்தொகை மற்றும் வட்டி என்பன கம்பனியால் முழுமையாக கழித்துக்கொள்ளப்பட்ட பின்னரே அக்கொடுப்பனவுக் கோரிக்கை செலுத்தப்படும் என்பதை நான்/நாம் அறிவேன்/அறிவோம்.

6. மேலே குறிப்பிடப்பட்ட பகுதி 4ஐ தவிர என்னால் / எம்மால் மற்றும் எமது வாரிசுகள், நிறைவேற்றுனர்கள் மற்றும் நிர்வாகிகள் அத்துடன்/அல்லது பயனாளிகள் இவர்களில் ஒருவரினால் இக்குறிப்பிடப்பட்ட கடன் முழுமையாக செலுத்தி முடிக்கப்படும் வரை இந்த ஒப்பந்தமானது முழுமையாக அமுலில் இருக்கும்.

.........................ம் ஆண்டு.................................... மாதம் ................................ நாள் ....................................... இல் திகதியிடப்பட்டது.

______________________ பிரேரணையாளரின் கையொப்பம்

______________________ ஆயுள் காப்புறுதி செய்யப்படுபவரின் கையொப்பம்

சாட்சியாளர்கள்:-

1.

கையொப்பம்: ........................................................................

தே.அ.அ. இல. : ...................................................................

பெயர்: ...................................................................

விலாசம்: ...................................................................

...................................................................

திகதி: ...................................................................

2.

கையொப்பம்: ........................................................................

தே.அ.அ. இல. : ...................................................................

பெயர்: ...................................................................

விலாசம்: ...................................................................

...................................................................

திகதி: ...................................................................